ஒரு கோமாளி நடிகர், அரசியல் நாடகம் ஆடுகிறார்!

‘ஆயுத பூஜையை அரசு அலுவலகங்கள் எளிமையாகக் கொண்டாடலாம்’ என அரசின் மத சார்பின்மைக்கு எதிராக ஓர் அரசாணை போட்டிருக்கிறது ஜோசப் விஜய் அரசு. அதன்படியே சரஸ்வதி பூஜை எனும் இந்துப் பண்டிகையைக் கொண்டாட அரசு அலுவலகங்களில் கதவைத் திறந்துவிட்டுள்ளது.

இது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் கூறும் மதச் சார்பின்மைக் கொள்கைக்கு எதிரானது; மக்களின் அரசு நிர்வாகத்தில் அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களும் வந்து செல்வதற்கும், உதவிகள் செய்வதற்கும், பெறுவதற்குமான ஒரு பொது அலுவலக நிருவாக இடத்தில்; தனிப்பட்ட முறையில் ஒரு மதத்திற்கான பண்டிகையைக் கொண்டாட இடம் அளிப்பது என்பது, மற்ற மதத்தினரிடையே மனத்தைப் புண்படுத்துவதோடு மட்டுமல்லாது, தேவையற்ற வெறுப்புணர்வை உருவாக்குவதாகும். இதுவரைப் பின்பற்றி வந்த மதச்சார்பின்மைக் கொள்கையை அரசே துணை நின்று தூண்டுகோலாகிப் புதைக்குழிக்குள் வாழ்த்தி அனுப்பும் “இந்துத்துவா” அரசாணையாகும்

அப்படியெனில், இஸ்லாமியர்களின் ரம்ஜான், பக்ரீத் போன்றவையும்; கிறிஸ்துவர்கள் கொண்டாடும் கிறிஸ்து மஸ், ஈஸ்டர், பெரிய வெள்ளி, குருத்தோலை போன்றவையும்; சீக்கியர்களின் குரு பூரப், குரு நானக் ஜெயந்தி, வைசாகி போன்றவையும், புத்தமதப் பண்டிகைகளான புத்த பூர்ணிமா/வெசாக், மகா பூஜா, பரிபூரண நாள் போன்றவையும், மற்றும் சமண மத பண்டிகைகளான மகாவீர் ஜெயந்தி, சமண தீபாவளி, அட்சய திதி போன்றவை இன்னும் பிற மதத்தவர் பண்டிகைகளைத் தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துத் தனது துறை சார்ந்த அலுவலகங்களில் கொண்டாட ஏற்பாடு செய்யுமா? என்ற கேள்வி எழாதா?

ஜோசப் விஜய் ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக அவருடன் உலா வந்தவரும், வாகனங்களில் சவாரி செய்தவருமான குடும்பச் சோதிடர் இரத்தன் பண்டிட் (ராதன் பண்டிட் வெற்றிவேல்/ரிக்கி) என்பவரை அரசு ஆலோசகராகச் (சிறப்புப் பணி அதிகாரி ஓ.எஸ்.டி) நியமித்தார். தி.மு.க. தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தவுடன் அந்த உத்தரவை அவர் திரும்பப் பெற்றார். அதன் பிறகு அவர் டெல்லி நிதி ஆயோக் கூட்டத்திற்கு சென்று விட்டு கர்நாடக உடுப்பி மாவட்டத்தில் உள்ள கொல்லூர் ஸ்ரீ மூகாம்பிகை கோயில் சென்று வழிபட்டார்.

அதைப்போல அண்மையில் ஆந்திராவில் தெலுங்கு கங்கை கிருஷ்ணாநதி நீர் பங்கீடு மற்றும் கோதாவரி காவிரி இணைப்புத் திட்டம் என அம் மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவுடன் பேச்சு வார்த்தை என்று கூறிச் சந்திக்கச் சென்றதாக நாடகம் ஆடினார். அப்போது ஆந்திர “கனக துர்கா கோயில்” சென்று வழிபாடு நடத்தி விட்டு திரும்பினார். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கும் சென்று பூரணக் கும்ப மரியாதையை ஏற்றுக் கொள்கிறார். அவருடைய தனிப்பட்ட ஆன்மீக நம்பிக்கையை நாம் யாரும் குறை சொல்லவில்லை.

ஆனால், ஓர் அரசின் மாநில முதலமைச்சராக அரசியல் அமைப்புச் சட்ட உறுதிமொழிகளை ஏற்று பொறுப்பேற்றவர் மதச்சார்பற்ற கொள்கைகளை நடைமுறைப்படுத்துபவராக இருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தின் படி பொறுப்பேற்றவர் இப்படிச் சென்று வரும் சொகுசு விமானப் பயணச் செலவுகள் யாருடையது? அதற்கான பல இலட்ச ரூபாய், பல கோடி ரூபாய் எனச் செலவாகும் அந்த ரூபாய் யாருடைய அப்பன் வீட்டுப் பணம்? மக்களுடைய வரிப்பணம் அல்லவா? என்பது பற்றியும் அவர் பதில் சொல்ல வேண்டும். அரசியலமைப்பு சட்டத்தின்படி மதச்சார்பற்ற இந்திய மாநிலத்தில்; தான் ஒரு கிறிஸ்தவர் என்றாலும், “இந்துத்துவக் கொள்கை “உடையவராக நாடகமாடி மீண்டும் சங்கிகளின் முகமூடியோடு ஜோசப் விஜய் தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருக்கிறார் என்பதை அடையாளப்படுத்தி வருகிறார். அதன் எடுத்துக்காட்டாகத்தான் இப்பொழுது அரசு நிர்வாகத்தில் ஓர் உத்தரவை போட்டு இருக்கிறார்.

1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்றார். அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள், சிலைகளை அகற்றுவது மற்றும் மத வழிபாடுகளைத் தவிர்ப்பது தொடர்பான சுற்றறிக்கை எனும் நினைவுக் குறிப்பு வெளியிடப் பட்டது.

அண்ணாவின் அறிவுறுத்தல் பேரில் வெளியிடப்பட்ட அந்த வரலாற்று சிறப்புமிக்க அரசாணையின் முக்கிய வடிவங்கள் (1) அரசாணை எண் / தேதி/நினைவுக் குறிப்பு எண்: 7553 / 62 2 பொது ஜெனரல் இலாக்கா, 29 ஏப்ரல் 1968ல் இதனை தொடர்ந்து ஜூலை 18, 1968 அன்று தலைமைச் செயலாளர் சி.ஏ.இராம கிருஷ்ணன் மூலம் அரசின் அனைத்து துறைகளுக்கும் சுற்றறிக்கையை அனுப்பப்பட்டது. (2) மதச் சார்பின்மையை நிலை நாட்டுதல்: அதில் உள்ள முக்கிய விவரங்களாக மதசார்பின்மையை நிலை நாட்டுதல்; இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி ‘அரசு’ என்பது பொதுவானது. மற்றும் மதச் சார்பற்றது. எனவே, அரசு அலுவலகத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட மதப் பிரச்சாரத்திற்கும் அல்லது அடையாளத்திற்கும் புகலிடமாக இருக்கக் கூடாது.

படங்கள் மற்றும் சிலைகள் அகற்றம்: அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு வளாகங்களில் உள்ள கடவுள், பெண் கடவுள்கள் படங்கள் உருவங்கள் மற்றும் சிலைகள் யாருடைய மனதும் புண்படுத்தாதவாறு படிப்படியாகவும் பொது அலுவலகத்தில் இருந்து அமைதியாகவும் அகற்றப்பட வேண்டும். (Removed gradually and unostentuitiously) **என்று அனைத்து துறை தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டது.**

மதக் கொண்டாட்டங்களுக்கு தடை: மதச் சார்பற்ற ஆட்சி, நாடு என்பதால்; எந்த மதத்தைச் சார்ந்த சாமியார்கள், சாது, மகான்கள், அவதாரங்கள் உட்பட கடவுள்கள், பெண் கடவுள்கள் ஆகியவற்றின் படங்கள், சிலைகள் முதலியனவற்றை அரசாங்க அலுவலகங்களில் அல்லது அரசுக்குச் சொந்தமான இடத்தில் வைத்திருப்பது சரியல்ல என்று அரசாங்கம் கருதுகிறது. அரசு அலுவலகங்களுக்குள் மதச்சார்பான விழாக்கள், பூஜைகள் மற்றும் கொண்டாட்டங்களை நடத்துவது தவிர்க்கப்பட வேண்டும்” முதல்வர் அண்ணா காலத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு முதலமைச்சர்களான கலைஞர், எம்.ஜி.ஆர்.ஜெயலலிதா, ஓ. பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி, மு.க.ஸ்டாலின் ஆகியோர் அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தி வந்தனர்.

இதற்கிடையில் 1993 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் அப்போதைய முதல்வராக இருந்த ஜெயலலிதா தலைமையிலான தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை கையேட்டில் (Tamilnadu Office Manual) சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து, அரசு அலுவலகங்களில் பணியாளர்கள் வழிபாடு நடத்துவதையும், மதச் சின்னங்கள் வைப்பதையும், முழுமையாகத் தடை செய்து அரசாணை பிறப்பித்தது. இது குறித்து விரிவான வரலாற்றுப் பின்னணியை “தி இந்து நாளிதழ்” “டைம்ஸ் ஆப் இந்தியா” போன்ற நாளேடுகள் செய்திகள் வெளியிட்டன.

ஆனால் இப்படிப்பட்ட அரசு உத்தரவுகளையும் முன்னாள் இருந்த முதல்வர்கள் ஆட்சியில் அரசு உத்தரவுகளையும் நடைமுறைகளையும் புறக்கணித்துவிட்டு த.வெ.க. ஆட்சி தற்போது ஆயுத பூஜை கொண்டாடும் விதமாக தமிழக அரசு அலுவலகங்களில் அக்டோபர் 10 அன்று சுற்றறிக்கை ஒன்றை வெளியிடப்பட்டுள்ளது. அதில் உள்ள முக்கிய விவரங்களாக கொண்டாட்டத்திற்கான வழிகாட்டு தல் அரசு அலுவலகங்கள் மற்றும் துறைகளில் ஆயுத பூஜை விழாக்களை எவ்வாறு முறைப்படி கொண்டாட வேண்டும் என்பதற்கான நெறிமுறைகள் இந்த சுற்றறிக்கையில் துறைச் செயலாளர்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. இந்த உத்தரவின் மிக முக்கியமான அம்சமாக அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை மற்றும் தீபாவளி போில் ஊழியர்களிடம் அல்லது பொது மக்களிடம் கட்டாய பண வசூல் சந்தா செய்யக்கூடாது என திட்டவட்டமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை போன்ற மத வழிபாடுகள் நடத்தலாம் என்ற விவாதம் எழுந்த போது நீதிமன்றம் இது குறித்து தெளிவுபடுத்தி உள்ளது. இதன் அடிப்படையில் நிரந்தர கட்டுமானங்கள் இன்றி கட்டாய பண வசூலில் ஈடுபடாமல் ஆயுத பூஜை தினத்தில் அரசு அலுவலகங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு பணி உபகரணங்களுக்கு பூஜை செய்வதற்கு தற்போதைய நடைமுறையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசின் கொள்கைகளைத் தெரிந்து கொள்ளாமல், காலம் காலமாகப் பின்பற்றி வரும் நடைமுறையைத் தூக்கி எறிந்து விட்டு, அரசியல் அமைப்புச் சட்டம் கூறும் சமயச் சார்பின்மை கருத்துக்கு எதிரான முறையில், “சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை என்ற பெயரால் அரசு அலுவலங்களில் கொண்டாடலாம்” என்று தமிழக அரசு உத்தரவு போடுகிறது என்றால்; அது பிற மதத்தை சேர்ந்தவர்கள் மனத்தைத் துன்புறுத்துவதும், சமுதாயத்தைப் பிளவுபடுத்திப் பிணக்குகள் உருவாக்கும் என்பதோடு, துன்புறுத்துவதுமாகும் அல்லவா! இதனை எதிர்த்து சரியான முறையில் தமிழக அரசு ஏன் எண்ணி பார்க்கவில்லை.

கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



நீதிமன்ற உத்தரவு எதுவானாலும், அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கருத்தில் கொண்டு அண்ணா அவர்கள் போட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தி கடந்த கால அரசுகள் தனது கடமை களைச் செய்து வந்தன. ஆனால், ஜோசப் விஜய் அரசு சட்ட விதிமுறைகளை மீறி, அரசு உத்தரவு போட்டிருக்கக் கூடாது. அரசு அலுவலகங்களில் அரசியலோ ஆன்மீக கருத்துகளோ திணிக்கக் கூடாது. அது அனைத்துத் தரப்பு மக்களும் வந்து செல்லும் மதச் சார்பற்ற பொதுவான இடம். ஆகவே, சமயச் சார்பின்மையைப் பின்பற்றி வரும் ஒரு அரசானது; தகுந்த முறையில் கவனம் செலுத்தி அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை கொண்டாட எந்த வகையிலும் இப்படியான ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கக் கூடாது.

த.வெ.க. கட்சித் தலைவர் ஜோசப் விஜய் தான் தொடங்கி நடத்தி வரும் கட்சியின் மேடைகளில் தந்தை பெரியார், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர், பெருந்தலைவர் காமராஜர், வீரமங்கை வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள் என்று படங்களைப் போட்டு நாடகம் நடத்தி வருகிறார். ஒரு பக்கம் பெரியார் கொள்கையின்படி நான் பகுத் தறிவைப் பின்பற்ற மாட்டேன் என்றும் கூறி வருகிறார். அதே நேரத்தில், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முதல் வராக இருந்தபோது, ரூபாய் 300 கோடி செலவில் கட்டி முடித்த கோவை “பெரியார் அறிவுலகம்” எனும் வரலாற்று நூலகத்தைத் தற்போதைய ‘கொத்துப் புரோட்டா’ முதல்வர் ஜோசப் விஜய் திறந்து வைத்திருக்கிறார்.

★ இந்திய அரசியலமைப்புச் சட்டம் முகப்புரையானது “இந்திய மக்களாகிய நாம் (We the people of India) என்று தொடங்கி இந்தியாவை ஓர் இறையாண்மை, சமத்துவ, சமய சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு (Soveriegn, Socialist, Secular, Democratic, Republic) நாடாகப் பிரகடனப்படுத்துகிறது.

★ இந்திய அரசியலமைப்புச் சட்டம் மதச்சார்பின்மைக்கு நேர்மறையான ஓர் அணுகுமுறையை (Positive Secularism) வழங்குகிறது. அரசுக்கு என்று தனியாக மதம் ஏதும் கிடையாது; இந்திய நாட்டுக்கென்று எந்த ஒரு அதிகாரப்பூர்வமான ‘அரசு மத ‘மும் கிடையாது; மத நடு நிலைமையானது மதத்தின் அடிப்படையில் குடிமக்களைப் பாகுபடுத்தாது; அரசியல் அமைப்புக் சட்டம் 1950 இல் வந்த போது, சமயச் சார்பற்ற (Secular) என்ற வார்த்தை முகப்புரையில் நேரடியாக இடம்பெறவில்லை என்றாலும், 1976 ஆம் ஆண்டு 42 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலமே இந்த வார்த்தை வரிகள் முகப்புரையில் முறைப்படி சேர்க்கப்பட்டன. அது அடிப்படைக் கட்டமைப்பாகப் புகழ்பெற்ற கேசவானந்த் பாரதி வழக்கில் (1973) மற்றும் எஸ்.ஆர்.பொம்மை வழக்கில் (1994) உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தபடி ‘மதச்சார்பின்மை என்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்ற முடியாத அடிப்படைக் கட்டமைப்பு (Basic structure) ஆகும்” என்று கூறியது.

அது மதச்சார்பின்மையை உறுதி செய்யும் சட்டப்பிரிவுகளான அரசியல் அமைப்புச் சட்டம் சட்டம் பகுதி III இல் உள்ள அடிப்படை உரிமைகளும் மதச்சார்பின்மையை உறுதி செய்கின்றன. அதற்கான சட்ட உறுப்புகள் (Articles) 15 ,16 மதம் காரணமாக அரசு எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாது என்றும், உறுப்பு 25: சமூகத்தில் (அரசு அலுவலகங்களில் அல்ல) எந்த ஒரு நபரையும் தனது விருப்பப்படி எந்த மதத்தையும் பின்பற்றவும் பரப்பவும் அனுமதிக்கிறது என்றும்; உறுப்பு 26: மத நிறுவனங்களை நிர்வகிக்கும் உரிமை அளிக்கிறது என்றும்; உறுப்பு 27: எந்த ஒரு மதத்தையும் பரப்புவதற்காக அரசு வரிகளை விதிக்கக் கூடாது என்றும் தெளிவுப்படுத்துகின்றன.

ஆனால், பொதுமக்கள் நாடிவரும் அரசு அலுவலகங்களில், மதப் பாகுபாடு எண்ணங்களை உருவாக்கும் வகையில் ஜோசப் விஜய் அரசு ‘கொத்து புரோட்டா’ அரசியல் ஆட்டம் போட்டு, “ஆயுத பூஜை”, “சரஸ்வதி” பூஜை” எனக் கொண்டாட அரசு ஊழியர்களுக்கு வெளிப்படையான உத்தரவு போட்டிருப்பது என்பது, பெரியாரின் மனிதநேய கொள்கைக்கு எதிரானது மட்டுமல்ல, முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா போட்ட உத்தரவுக்கும் மாறானது; அரசியல் சட்டத்திற்கும் புறம்பானது. ஆம்; ஒரு கோமாளி நடிகர் முதல்வராக நாடகமாடுகிறார்!

விண்ணிலிருந்து மழைத்துளி மண்ணில் விழும் முன்பே

மக்களுக்காகக் களமிறங்கியவர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பெருமிதம்!

சென்னை, அக்.21-

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு கழக அமைப்பை வலுப்படுத்தி, சீரமைப்புகளை மேற்கொள்ளும் வகையில், துறைமுகம், கொளத்தூர், எழும்பூர், வில்லிவாக்கம், திரு.வி.க.நகர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைத் தொடர்ந்து, இறுதியாக நேற்று முன்தினம் (19.10.2026) சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்கினார்.



இக்கூட்டத்தில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், பி.கே.மூர்த்தி மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களை சந்தித்த பி.கே.சேகர் பாபு அளித்த பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள், தேர்தலுக்குப் பிறகு கட்சியை அமைப்பு ரீதியாகச் சீராய்வு செய்து, சட்டமன்றத் தொகுதிகள்தோறும் சீரமைப்புப் பணிகள் நடைபெறும் என்றார். அது கிட்டத்தட்ட இறுதிக்கட்டத்தை எட்டியிருக்கிறது.

இன்றைக்கு அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், அன்பிற்கினிய டி.எஸ்.பி. ராஜகோபால் மற்றும் நம்முடைய நாகராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே. மூர்த்தி ஆகியோரின் தலைமையில், வட்டச் செயலாளர்கள் மற்றும் ஏனைய நிர்வாகிகளுடன் கலந்தாலோ சித்து, தலைமைக் கழகத்தின் கட்டளைப்படி சீரமைப்புகளை மேற்கொள்வதற்காக ஆய்வுகளை மேற்கொண்டோம்.

கேள்வி: எஸ்.ஜ.ஆர். விவகாரத்தில் தோற்றுவிட்டார்கள் என்று திருமாவள வன் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார். முன்னாள் முதலமைச்சர் தோற்றுவிட்டார் என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், இந்தக் குளறுபடிக்குக் காரணமே தி.மு.க. தான் என்று வைகோ அவர்கள் கருத்துத் தெரிவித்திருப்பதாகச் சொல்கிறார்களே?

பதில்: இப்போது ஒரு கூட்டணி உருவாகியிருக்கிறது. அது குழம்பிய குட்டை. அதில் மீன்பிடிக்க முடியாது.

திருமாவளவன் அவர்கள் சொல்வதற்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. அவர் மீது எனக்கு மரியாதை இருக்கிறது.

ஆனால், வைகோ அவர்கள் இந்தக் குளறுபடிக்குக் காரணமே திமுகதான் என்று சொல்லியிருக்கிறார்.

வைகோ அவர்கள் அரசியல் கட்சியைத் தொடங்கிய காலத்திலிருந்து அவருடைய கடந்த காலப் பேச்சுகளை எடுத்துப் பாருங்கள்.

ஒரு நிலையான கருத்து இல்லாமல், மாறி மாறிப் பேசுகின்றார். அப்படிப் பேசுகின்ற பேச்சு என்பது அவருடைய நிலைத்தடுமாற்றத் தையே வெளிப்படுத்தும்.

ஆனால், சிறந்த பேச்சாளர். ஏனோ அப்படி மாறி மாறிப் பேசுகிறார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

கேள்வி: இன்றைக்கு விலைவாசி உயர்வு மக்களை மிகவும் தொந்தரவு செய்து கொண்டிருக்கிறது. அரிசி விலைகூட 100 ரூபாய்க்கு மேல் உயர்ந்து விட்டது.

இது சர்வதேசப் பிரச்சினை. இதற்கும் மாநில அரசுக்கும் சம்பந்தம் இல்லை என்பதைப் போல ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்களே?

பதில்: எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, அது சர்வதேசப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, மாநிலத்தில் விலைவாசியைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டியது அந்த மாநில அரசினுடைய பொறுப்பு.

அந்தப் பொறுப்பிலிருந்து இந்த ஆட்சி விலகியிருக்கிறது என்பதனை உணர்ந்து, த.வெ.க. பக்கமிருந்த மக்கள் அதிலிருந்து விலகிச் செல்கின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கிறது.

இது இந்த ஆட்சியினுடைய நிர்வாகத் திறமை யின்மையைச் சுட்டிக்காட்டு கிறது.

கேள்வி: சரி, இந்த ஆட்சி பொறுப்பேற்று ஐந்து மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

இப்போதும் மழை பெய்தால், மழைநீர் தேங்குவதற்குத் திமுக அரசாங்கம்தான் காரணம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே?

பதில்: எங்கே மழைநீர் தேங்கியது?

நாங்கள் ஏற்படுத்திய கட்டமைப்பால்தான் 17 சென்டிமீட்டருக்கு அதிகமாக மழை பெய்தபோதுகூட, ஒருசில பகுதிகளைத் தவிர, சென்னையில் பெரிய அளவில் நீர்த்தேக்கம் எங்கும் இல்லை.

இந்த ஆட்சிக்கும் நல்ல பெயர் வாங்குவதற்குக் காரணமாக இருந்தது திராவிட மாடல் ஆட்சிதான் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்ற 2021ஆம் ஆண்டு, சென்னையில் 731 இடங்கள் தாழ்வான, மழைநீர் தேங்கும் பகுதிகளாகக் கண்டறியப் பட்டன.

அது தற்போது 231 ஆகக் குறைந்திருக்கிறது என்று சென்னை மாநகர ஆணையரே சொல்லிவிட்டார்.

திராவிட மாடல் ஆட்சியின் மக்கள் பணிகளுக்கு அவரே சான்றிதழ் தந்திருக்கின்றார்.

அப்படி 2021இல் 731 இடங்கள் தாழ்வான பகுதிகளாகக் கண்டறியப்பட்டதில், 500க்கும் மேற்பட்ட தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கும் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத்தான் சாரும்.

ஆகவே, இந்தத் தண்ணீர் தேங்காத நிலைக்குக் காரணம், மாண்புமிகு திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் அன்பிற்கினிய அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களும்தான்.

விண்ணிலே இருந்த மழைத்துளி மண்ணிற்கு வருவதற்கு முன்பாக, மண்ணிலே கால் பதித்து மக்களுடைய குறைகளைக் களைந்தவர் எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியினுடைய நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

எங்கள் தலைவர் மேம் போக்காக எந்த அரசியலும் செய்யாதவர். அடிமட்டம் வரை சென்று, இருக்கின்ற பிரச்சினைகளை உணர்ந்து, அவற்றுக்குத் தீர்வு கண்டதால்தான் இன்றைக்குச் சென்னை இந்த நிலையில் இருக்கிறது.

கேள்வி: அமைச்சர் ரமேஷ் அவர்களிடம் கட்டணமில்லா தரிசனத்தைப் பற்றி நாங்கள் கேள்வி கேட்டபோது, ஆட்சிப் பொறுப்பேற்று மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. இவ்வளவு சீக்கிரத்தில் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார். அதுகுறித்த தங்களின் பார்வை என்ன?

பதில்: எதுவுமே அவரால் செய்ய முடியவில்லை. கட்டணமில்லா தரிசனம் என்றார்கள். முடிந்ததா? ஆன்லைன் என்றார்கள். முடிந்ததா? செல்போன் வாங்கி வைப்பேன் என்றார். முடிந்ததா?

மதுரை மீனாட்சியம்மன் கோயில் கும்பாபிஷே கத்தைச் சர்ச்சை இல்லாமல் நடத்த முடிந்ததா?

இல்லை!

ஆனால், எங்கள் ஆட்சியில், எங்களுடைய திராவிட மாடல் ஆட்சியில், எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களுக்குத்தான் அவர்கள் ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ரிப்பன் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் கொண்டு வந்த திட்டங்களைத் திறந்து வைத்துவிட்டு, ஏதோ இவர்கள் புதிதாகச் செய்ததைப் போலப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, நான் நிச்சயமாகச் சொல்லுவேன். இன்னும் ஓராண்டு கழித்துப் பேசினால்கூட அவர்களுக்கு நிர்வாகத் திறன் போதாது.

நிர்வாகத் திறமையின்மையால் உருவாகியிருக்கக் கூடிய பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது இந்த ஆட்சி.

ஆகவே, இப்படித்தான் இருக்கும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டியளித்தார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.வி. மலையன்
அக்டோபர் 21 (2024)



கழகம் துவக்கப்பட்டபோதே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

சென்னை மாவட்டத்தில் சூளைமேடு வட்டச் செயலாளராகவும் – நீண்டகாலம் தென்சென்னை மாவட்ட அவைத்தலைவராகவும் – தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகத் தலைவர் சென்னை மாநகர மேயராக பொறுப்பு வகித்தபோது சென்னை மாநகராட்சி மன்ற ஆளுங்கட்சித் தலைவராகவும், 2001–2006ல் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.